# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் நடாத்திய சர்வதேச ஆய்வரங்குகள்: ஓர் மதிப்பீட்டாய்வு

# International Symposiums organized by Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka: An Evaluative Study

MZ. Zunoomy[1], SMM. Mazahir[2]

[1] Department of Arabic Language, [2] Department of Islamic Studies
Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka
zunoomyzain94@gmail.com, mazahirsmm@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகம்சார் பிரச்சினைகளுக்குத் தர்க்க ரீதியான தீர்வுகளை முன்வைக்கும் இயலுமைகளை ஆய்வுகள் கொண்டுள்ளன. முறைமையைப் பேணி மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் சமூகத்தில் மிகச் சிறந்த தாக்கங்களை ஏற்படத்தக்கூடியவையாகும் என்றவகையில் அறபு மற்றும் இஸ்லாமியத் துறைகளில் ஆய்வு முயற்சிகளை மேற்கொள்ள துணைபுரியும் இஸ்லாமிய கற்கைகள், அறபு மொழிப் பீட சர்வதேச ஆய்வரங்குகள் பற்றிய மதிப்பாட்டாய்வொன்றை இந்த ஆய்வு அடையாளப்படுத்தி நிற்கின்றது. 2014 – 2018ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் நடாத்தப்பட்ட ஐந்து சர்வதேச ஆய்வரங்குகளின் அடைவுகளை பல்கோணத்தில் நின்று முன்வைப்பது இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆய்வரங்குகளை செயற்படுத்திய பொறுப்பாளர்கள், விரிவுரையாளர்கள், பட்டதாரிகள், இளங்கலை மாணவர்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் அவதானம் ஆகியவற்றைக் கொண்ட முதல்நிலைத் தரவுகளும், Proceedings and The Book of Abstracts ஆகியவற்றை கொண்ட இரண்டாம் நிலைத்தரவுகளும் இவ்வாய்வில் உள்வாங்கப்பட்டுள்ளன. இவை விபரிப்பு முறையியல் (Descriptive Methodology) மூலம் கலந்துரையாடப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளில் இருந்து பெறப்பட்ட அளவுகள் MS Excel மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இப்பீடத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வரங்குகள் கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் ஆய்வுக் கலாசாரத்தை பல்கலைக்கழக, சமூக, தேசிய, சர்வதேச ரீதியில் உருவாக்குவதில் சிறந்த அடைவை பெற்றிருக்கின்றது என்பது ஆய்வின் முடிவாக பிரஸ்தாபிக்கப்படுகின்றது. இறுதியாக, எதிர்வரும் வருடங்களில் நடாத்தப்படவுள்ள சர்வதேச ஆய்வரங்குகளிற்கான சில பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** ஆய்வரங்கு, இஸ்லாமிய கற்கைகள், அறபு மொழி, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## அறிமுகம் (Introduction):

தேசியத்திற்கு பங்களிப்பு செய்யும் முதன்மை நிறுவனங்களுள் பல்கலைக்கழகங்களுக்கு மகத்தான பங்குண்டு. அறிவுசார் திறனை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளில் கரிசனை செலுத்துதல் பல்கலைக்கழகத்தின் முக்கிய பொறுப்பாகும். மேலும் நாட்டிற்கும், சமூகத்திற்கும் பங்களிப்புச் செய்யும் புத்திஜீவிகளை உருவாக்கும் இந்தப் பல்கலைக்கழகங்கள் ஆக்கபூர்வமான ஆய்வுச் செயற்பாடுகளின் பால் ஈடுபாடு காட்டுவது அவசியமாகும். இந்தவகையில் இலங்கைத் திருநாட்டிலுள்ள முதன்மைப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆய்வுச் செயற்பாடுகளை பேணுவதற்கான பல்வேறு நிகழ்ச்சி நிரல்களை கொண்டு செயற்பட்டு வருகின்றது. இதன்தொடரில், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடமானது ஆய்வுச் செயற்பாடுகளுக்கு காத்திரமான பங்களிப்பை அண்மைய வருடங்களாக வழங்கி வருகின்றது. இவற்றுள் பின்வரும் நான்கு செயற்பாடுகள் ஈன்று குறிப்பிடத்தக்கவையாகும்.

1) Colloquim (annually) (from 2013 onwards)
2) International Symposium of FIA (annually) (from 2014 onwards)
3) Students' Research Forum for Social Researches - SRF (Since 2016)
4) Sri Lankan Journal of Arabic and Islamic Studies - SLJAIS (from 2018 onwards)

இவ்வாறு பல்கலைக்கழக மட்டம், சமூக மட்டம், தேசிய மட்டம், சர்வதேச மட்டம் ஆகியவற்றினூடாக ஆய்வுச் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்யும் இப்பீடமானது, காலத்தின் தேவை கருதி மேலும் பல ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். மேலும் இவ்வாய்வுச் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்யும் பார்வை (view) இன்னும் விசாலமாக்கப்பட வேண்டும் என்றவகையில் இப்பீடத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வரங்குகள் தொடர்பான மதிப்பீட்டை முன்வைப்பதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. 2014 – 2018 வரை நடாத்தப்பட்ட 5 சர்வதேச ஆய்வரங்குகளின் கருப்பொருட்கள் (Themes) பின்வருமாறு அமைந்திருந்தன.

2014 – Towards the Integration of Islamic Knowledge with Human Sciences

2015 – Empowering National Development through Religions, Languages, Culture and Society

2016 – The Role of Islamic and Arabic Studies in the National Development

2017 – Contemporary Issues in Islamic and Arabic Studies: The Way Forward

2018 – Sustainable Development through Arabic and Islamic Studies

**ஆய்வின் முக்கியத்துவம் (Importance):**

2014ஆம் ஆண்டு முதல் இஸ்லாமிய கற்கைகள், அறபு மொழிப் பீடத்தினால் சர்வதேச ஆய்வரங்கு (International Symposium) நடாத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நிலையில், இதுவரை காலமும் நடாத்தி முடிக்கப்பட்ட ஐந்து சர்வதேச ஆய்வரங்குகள் பற்றிய தரம்சார், பண்புசார் மதிப்பீட்டை பெறுவதன் ஊடாக எதிர்காலங்களில் ஒழுங்கமைக்கப்படும் சர்வதேச ஆய்வரங்குகளை மேலும் ஆக்கபூர்வமான வகையில் வடிவமைக்க முடியும். இந்தவகையில், நடந்து முடிந்த ஐந்து சர்வதேச ஆய்வரங்குகள் (2014-2018) பற்றிய மதிப்பீட்டாய்வு இதுவரை (ஆய்வாளர்களின் தேடலுக்கு உட்பட்ட வரை) இடம்பெறவில்லை என்றவகையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. பல்வேறு கோணங்களில் இவ்வாய்வரங்குகள் மதிப்பீடு செய்யப்படுவது இவ்வாய்வின் முக்கியத்துவத்துவத்திற்கு மேலும் வலுசேர்க்கின்றது.

**ஆய்வுப் பிரச்சினை (Problem of the Research):**

இஸ்லாமிய கற்கைகள், அறபு மொழிப் பீடத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வரங்குகள் (International Symposium) சர்வதேச, தேசிய, சமூக மட்டங்களில் ஆய்வுச் செயற்பாட்டை ஊக்குவிக்க உந்துசக்தியாக அமைந்திருந்தனவா என்பதை ஆராய்தல்.

**ஆய்வு நோக்கங்கள் (Objectives):**

- 2014 – 2018 வரையான காலப்பகுதிகளில் இடம்பெற்ற சர்வதேச ஆய்வரங்குகளின் அடைவுகளை மதிப்பீடு செய்தல்.
- சர்வதேச ஆய்வரங்குகள் மேலும் ஆக்கபூர்வமாக நடாத்தப்பட பரிந்துரைகளை முன்வைத்தல்

**ஆய்வு முறையியல் (Methodology):**

இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவுகளை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை மையமாக கொண்டு பண்புசார் பகுப்பாய்வு முறையில் (Descriptive Analysis) மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகள் ஒவ்வொரு வருடமும் ஆய்வரங்குகளை செயற்படுத்திய பொறுப்பாளர்கள், விரிவுரையாளர்கள், பட்டதாரிகள், இளங்கலை மாணவர்களுடனான நேர்காணல், கலந்துரையாடல், அவதானம் மூலம் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளுக்காக Proceedings, The books of Abstract, E-Repository of SEUSL ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு (Literature Review):**

“இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம் நடாத்திய சர்வதேச ஆய்வரங்குகள்: ஒரு மதிப்பீட்டாய்வு” தொடர்பான ஆய்வு முயற்சி முதன்மையான முயற்சியாக அமையப்பெற்றுள்ளதால், தேடலுக்குட்பட்ட வரை (ஆய்வாளர்களின்) இத்தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுச் செயற்பாடுகளை காணக் கிடைக்கவில்லை என்பது ஆய்வாளர்களின் அபிப்பிராயமாகும்.

**கலந்துரையாடல்களும் கண்டுபிடிப்புக்களும் (Discussions & Findings):**

**கலந்துரையாடல் - 01**

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தில் கடந்த இறுதி ஐந்து வருடங்களிலும் நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வரங்குகளின் மொத்த ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை இறுதி நான்கு வருடங்களாக துரிதமான அளவில் அதிகரித்து வந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இலங்கைத் திருநாட்டில் அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் அறிவுவளர்ச்சியின் தாக்கத்தை பிரதிபலிப்பதாக இது அமைந்துள்ளது. குறிப்பாக கல்விப் பணியில் ஈடுபடும் முஸ்லிம்களின் தேடலின் வியாபகத்தை மறைமுகமாக இது சுட்டுகின்றது. இஸ்லாமிய சிந்தனை மற்றும் நாகரீகம் (Islamic Thoughts & Civilization) எனும் உப கருப்பொருளின் கடந்த ஐந்து வருடங்களிலும் உள்வாங்கப்பட்ட ஆய்வுகளை வைத்து இதனை அவதானிக்க முடிகின்றது.

இந்த ஆய்வரங்குகளில் முன்வைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை

**The Evaluation on the total of papers for symposiums (annually)**


| **Tracks** | **2014** | **2015** | **2016** | **2017** | **2018** |
|---|---|---|---|---|---|
| Language, Linguistic & Translation | **10** | | **-** | **-** | **-** |
| Language & Literature | **-** | | **06** | **11** | **06** |
| Linguistic & Translation | **-** | | **05** | **05** | **15** |
| Islamic Thoughts & Civilization | **21** | | **11** | **28** | **33** |
| Islamic Banking & Finance | **13** | | **13** | **07** | **14** |
| Islamic Law | **-** | | **04** | **02** | **01** |
| Muslim Community Issues | **09** | | **-** | **-** | |
| Social Science & Humanities | **-** | It isn't divided by tracks | **20** | **-** | |
| Interdisciplinary Studies | **-** | | **-** | **10** | |
| | | | | | |
| **Total Papers** | **53** | **41** | **59** | **63** | **69** |

**Table - 01**

படிப்படியாக அதிகரித்து வந்துள்ளதனையும் 2015ஆம் ஆண்டில் சிறியதொரு தளர்ச்சி காணப்பட்டதனையும் இங்கு அவதானிக்கலாம்.

**கலந்துரையாடல் - 02**

இப்பீடத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேச ஆய்வரங்குகள், அவற்றின் தரத்தினை பேணுவதில் முனைப்புடன் செயற்படுவது முக்கியமாகும். இந்தவகையில் இதுவரை நடாத்தப்பட்ட ஆய்வரங்குகள் சர்வதேச தரத்தை பெற்றிருப்பதனை வரைபு – 01 மூலம் அடையாளப்படுத்த முடியும்.




| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| Out of Sri Lanka | 6 | 5 | 14 | 9 | 1 |
| Out of SEUSL | 9 | 9 | 10 | 14 | 10 |
| SEUSL | 36 | 21 | 31 | 37 | 51 |
| Others | 2 | 6 | 4 | 3 | 7 |

வரைபு - 01

கடந்த வருடம் (2018) இடம்பெற்ற ஆய்வரங்கிற்கு வெளிநாட்டு ஆய்வாளர்கள் மிக மிகக் குறைவாகக் காணப்பட்டமை தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போது,


- வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கான விடுமுறை (Holiday) திட்டமிட்டலிலுள்ள திருப்தி நிலை பற்றிய ஏற்ற இறக்கங்கள்
- பிரயாண தூரங்கள் மிக அதிகமாக காணப்படல்
- வெளிநாட்டு ஆய்வாளர்களுக்கான பதிவுக்கட்டணம்
- பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் சர்வதேச விமான நிலையமின்மை

ஆகியன காரணங்களாக கண்டறியப்பட்டன.

இப்பீட ஆய்வரங்குகளானது, உள்ளக ஆய்வாளர்களுக்கு மிகச் சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பதை மேற்படி வரைபின் மூலம் அடையாளப்படுத்த முடியுமாக உள்ளது. ஆரம்ப நான்கு வருடங்களை ஒப்பிடுகையில் இறுதி வருடத்தில் அதிகளவான ஆய்வுகள் தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள விரிவுரையாளர் உட்பட அவர்களின் வழிகாட்டலின் கீழ் பட்டதாரி மாணவர்களும் ஆய்வுகளை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், பேராதெனிய பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம் ஆகியன இப்பீட சர்வதேச ஆய்வரங்கிற்கு ஆய்வுகளை சமர்ப்பித்த பல்கலைக்கழகங்களாகும்.

**கலந்துரையாடல் - 03**

வருடாந்தம் நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வரங்குகளில் தென்கிழக்குப் பல்கலைக்கழக பீடங்களில் அதிகளவான ஆய்வுகளை சமர்ப்பித்த பீடமாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பீடமே காணப்படுவதை ஆய்வுகளின் எண்ணிக்கையை வைத்து மதிப்பிடக் கூடியதாக உள்ளது. ‘முற்றத்து மல்லிகை மணப்பதில்லை’ என்பதற்கு எதிர்மாறாக இப்பீடம் செயற்பட்டிருப்பது, ஆய்வின் மீதான பரந்த பார்வை இங்கு பணியாற்றும் விரிவுரையாளர்கள் உட்பட மாணவர்களிடம் உண்டு என்பதை நிரூபிக்கின்றது.




| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| FIA | 19 | 13 | 18 | 27 | 34 |
| FAC | 11 | 7 | 10 | 8 | 16 |
| FMC | 6 | 1 | 3 | 0 | 0 |
| FE | 0 | 0 | 0 | 2 | 0 |
| FAS | 0 | 0 | 0 | 0 | 1 |

வரைபு - 02

அண்மைய வருடங்களாக இப்பீடத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை தொடர்பாக கலந்துரையாடிய வேளையில் பின்வரும் விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

விரிவுரையாளர்களின் ஆக்கபூர்வமான வழிகாட்டலும், ஆய்வின் மீதான ஈடுபாடும்:

இப்பீட பெரும்பான்மையான விரிவுரையாளர்கள் தங்கள் விரிவுரைகளோடு மாத்திரம் சுருக்கிக் கொள்ளாமல், ஆய்வுச் செயற்பாடுகளின் பால் மாணவர்களை ஆர்வமூட்டுதல் மாத்திரமன்றி அவர்களும் ஆய்வுகளை சமர்ப்பிப்பதில் ஈடுபாடு காட்டுவதையும் மாணவர்களுடனான கலந்துரையாடல்களின் போது பெற முடிந்தது. மேலும் தாங்களும் ஆய்வுகளில் அதிக ஈடுபாடு

சமூகவியல் ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம்:

2016ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றம் மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாசாரத்தை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக பல்வேறு விதமான வழிகாட்டல் நிகழ்ச்சிகளை விரிவுரையாளர்களின் துணையோடு நடாத்தியதன் காரணமாக,

ஆய்வின் மீதான உந்துதல் ஏற்பட்டு, மாணவர்கள் விரிவுரையாளர்களின் வழிகாட்டலின் கீழ் ஆய்வுகளை சமர்ப்பித்திருந்தமையை அண்மைய இரு வருடங்களிலும் அடையாளப்படுத்த முடியுமாக இருந்தது. 2017ஆம் ஆண்டு 12 மாணவர்களும், 2018ஆம் ஆண்டு 16 மாணவர்களும் பிரதான ஆய்வாளர்களாக (Author) விரிவுரையாளர்களின் கண்காணிப்பின் கீழ் (Supervising) ஆய்வுகளை சமர்ப்பித்திருந்தனர்.

Sri Lankan Journal of Arabic and Islamic Studies – SLJAIS:

இந்த சர்வதேச ஆய்வுச் சஞ்சிகை 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து ஆய்வுச் சிந்தனைக்கான வாயில் பல்கோணத்தில் வியாபித்ததன் பிரதிபலனாக, இப்பீடத்திலுருந்து அதிகளவான ஆய்வுகள் கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வாறு ஆய்வுக் கலாசாரம் குறிப்பாக மாணவர்களை சூழ்ந்து கொண்டதன் விளைவாக அதிகமான மாணவர்கள் ஆய்வின்பால் கரிசனை காட்ட வழிகோலியதாக விரிவுரையாளர்களுடனான கலந்துரையாடல்களில் அவதானிக்க முடிந்தது.

மேலும், ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கான பதிவுக் கட்டணம் பட்டதாரி மாணவர்களிடம் கோரப்படாமையும் அதிகளவான ஆய்வுக்கட்டுரைகள் மாணவர்களின் மூலம் முன்வைக்கப்பட்டமைக்கு மறைமுக காரணியாக உள்ளதனை அவதானிக்க முடிந்தது.


கடந்த ஐந்து வருடங்களில் இப்பீட சர்வதேச ஆய்வரங்குகளிற்கு ஆய்வுகளை சமர்ப்பித்த இப்பீடத்தை சேர்ந்த இளங்கலை மாணவர்களையும் (Undergraduate), முதுகலை பட்டதாரிகளையும் (Postgraduate) ஆய்வுக்குட்படுத்திய போது, இளங்கலை மாணவர்கள் தங்கள் கல்வியாண்டுகளில் ஆய்வு முயற்சிகளுக்கு கூடியளவு ஆர்வம் காட்டும் அதேவேளை, பட்டத்தை பூர்த்தி செய்தவுடன் ஆய்வுச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகின்றனர். இதற்கான காரணங்கள் பற்றி கலந்துரையாடுகையில்,

- நிரந்தர தொழிலொன்றை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் கூடிய அக்கறை செலுத்தல்.
- கலைமானி பட்டத்துடன் கல்விப் பயணத்தை நிறுத்திக்கொள்ளல்.
- ஆய்வுகளின் பால் கவனம் செலுத்தும்வகையிலான உந்துதல் இன்மை ஆகியன அடையாளப்படுத்தப்பட்டன. அடுத்து, கலைமாணிப் பட்டம் பெற்றதன் பின் உதவி விரிவுரையாளர்களாக பணிபுரிய வாய்ப்புப் பெறுபவர்களே அடுத்த கட்ட ஆய்வு முயற்சிகளுக்கு முன்னுரிமை வழங்குவது அவதானிக்கப்பட்டது.

ஏனைய பீடங்களினால் (FMC, FT, FE & FAS) சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகளின் தொகை குறைவாக காணப்படுவது தொடர்பாக கலந்துரையாடலில் ஈடுபட்ட போது சமூகவியல்சார் பாடவிதானங்களை கற்கும் வீதம் குறைவு, சமூகவியல் ஆய்வுகளை எவ்வாறு மேற்கொள்ளுதல் என்பதிலுள்ள விளக்கமின்மை மற்றும் சமூகவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான குறைந்தளவான ஆர்வமூட்டல் என்பன காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டன.

**கலந்துரையாடல் - 04**

இப்பீட சர்வதேச ஆய்வரங்குகளிற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளை மொழிரீதியாக மதிப்பிடுகின்ற போது பின்வரும் வரைபு - 03 பெறப்பட்டது.




வரைபு - 03


தமிழ்மொழி பேசும் ஆய்வாளர்கள் சமூகத்தில் அதிகரித்து வருவதனை தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கையை வைத்து மதிப்பிடக்கூடியதாக உள்ளது. மறுபுறம், இரு வருடங்களிலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆங்கில மொழியிலான ஆய்வுகளின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு பிரதான காரணமாக பட்டதாரி மாணவர்களின் தமிழ் மொழியிலான ஆய்வுகளின் தாக்கத்தை அடையாளப்படுத்தலாம். பெரும்பான்மையான ஆய்வுகளை மாணவர்கள் தமிழ் மொழியில் வரைந்தமையானது, ஏனைய மொழிகளிலான ஆய்வுகளின் எண்ணிக்கையில் தாக்கம் செலுத்தியுள்ளது.

இப்பீடத்தின் கருப்பொருட்கள் அறபு மொழியையும், இஸ்லாமிய கற்கைகளையும் மையப்படுத்தியதாக அமைந்திருந்தும், இலங்கையில் பிறமொழி பேசுகின்ற சமூகத்தவர்களுக்கு ஆய்வுரீதியான தெளிவுகளை முன்வைப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தும் அதற்கான ஆக்கபூர்வமான அடைவை இந்த ஆய்வரங்குகள் பெறத் தவறியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. காலத்தின் தேவை கருதி, சிங்கள மொழியிலான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆர்வமூட்டல்கள் கணிசமானளவு இடம்பெறவில்லை என்பதை நேர்காணல்களில் இருந்து வரையறுக்க முடிகின்றது.

**கலந்துரையாடல் - 05**

இப்பீடமானது அறபு மொழிக்கென்று தனியானதொரு துறையை சுமந்திருக்கின்றது என்ற பாங்கில் அறபு மொழியில் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளை ஆராய்கின்ற போது,

கடந்த ஐந்து வருடங்களாக இளங்கலை மாணவர்களால் அறபு மொழியிலான ஆய்வுக் கட்ரையும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது புலனாகின்றது. மாறாக, உதவி விரிரையாளர்கள், விரிவுரையாளர்கள் மூலமே ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.




வரைபு - 04

மாணவர்களிடம் அறபு மொழியில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்காமை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டபோது அறபு மொழித் தேர்ச்சியிலுள்ள பலவீனங்கள், அறபு மொழியில் ஆய்வு செய்வது மிக மிக சிரமம் என்ற மனோநிலை, அறபு மொழியில் ஆய்வுப் பிரச்சினையை இனங்காண்பதிலுள்ள இடர்பாடுகள், அறபு மொழியிலான ஆய்வு முன்னெடுப்புக்கள் பற்றி விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடுவது அரிதாக இருத்தல் மற்றும் அறபு மொழியில் சிறந்த தேர்ச்சியுடைய மாணவர்களுக்கு ஆய்வின் மீதான ஆர்வமின்மை என்பன காரணங்களாகக் கண்டறியப்பட்டன.

## முடிவுரை (Conclusion):

சர்வதேச ஆய்வரங்குகள் அனைத்துவித உயர்கல்வி மட்டங்களிலும் ஆய்வுச் செயன்முறைக்கான வாய்ப்புக்களை வழங்குவது அவசியமாகும். இந்த நோக்கத்தை முன்னிறுத்தி நோக்குகின்ற போது இப்பீடத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஆய்வரங்குகளில் ஒரு சில ஏற்ற இறக்கங்கள் காணப்படுவதை அடையாளப்படுத்த முடியுமாக உள்ளது. குறிப்பாக, வெளிநாட்டவர்களின் ஆய்வுக் கட்டுரைகளின் சமர்ப்பிப்பு, இளங்கலை மாணவர்களின் ஆய்வுகளின் எண்ணிக்கை, சிங்கள மொழியிலான ஆய்வுகள் போன்ற குறிப்பிடத்தக்கவையாகும். மேலும் இஸ்லாம் மற்றும் அறபு மொழிசார் துறைகளில் முன்னெடுக்கப்படும் மகத்தான முயற்சியான இவ்வாய்வரங்குகள், பல்லின கலாசார சூழல் மத்தியில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதை ஆராய வேண்டிய தேவையை அண்மைய வருட நிகழ்வுகள் உணர்த்தி நிற்கின்றன. எனினும், இப்பீடத்தினால் கடந்த வருடங்களில் நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வரங்குகள், ஆய்வுக் கலாசாரத்தை

பல்கலைக்கழக, சமூக, தேசிய, சர்வதேச ரீதியில் உருவாக்குவதில் சிறந்த அடைவை பெற்றிருக்கின்றது என்பது ஆய்வின் முடிவாக முன்வைக்கப்படுகின்றது.

**பரிந்துரைகள் (Recommendations):**

- சர்வதேச ஆய்வரங்குகளின் தரத்தை பேணிக்கொள்ளும் முகமாக, இளங்கலை மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகளை வரையறுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டு ஆய்வாளர்கள் தொடர்பில் சற்று கூடிய கவனம் செலுத்துவதன் தேவை உணரப்பட்டுள்ளது. வருடாந்தம் அவர்களுள் கணிசமான தொகையினரை உள்வாங்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- இளங்கலை அறபு மொழித் துறை மாணவர்கள் அறபு மொழியிலான ஆய்வுகளை சமர்ப்பிப்பதற்குரிய ஆர்வமூட்டல்கள், உந்துதல்கள் இப்பீடத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- இஸ்லாமிய சிந்தனை மற்றும் விழுமியங்கள் பற்றிய சிங்கள மொழியிலான ஆய்வுக் கட்டுரைகளை இன்றைய இலங்கைச் சூழல் வேண்டி நிற்கின்றன என்ற சமூகப் பொறுப்பின் அடிப்படையில், சிங்கள மொழியில் புலமையுள்ள விரிவுரையாளர்கள், இளங்கலை மாணவர்கள் மீதான பார்வை விசாலமாக்கப்படுவதுடன், அவர்களுக்கான உந்துதல்களும் வழங்கப்பட வேண்டும்.
- ‘ஆய்வென்பது பல்கலைக்கழகம்சார் செயற்பாடு மாத்திரமே ஆகும்’ எனும் தவறான எண்ணக்கருவை களையும் முகமாக தெரிவு செய்யப்பட்ட கல்வியியற் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள் போன்றவற்றை ஆய்வுக் கலாசாரத்திற்குள் உள்வாங்கும் செயற்திட்டங்களை முன்னெடுத்தல்.

**உசாத்துணைகள் (References):**


- ✓ “Proceedings of the First International Symposium”. (2014). Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
- ✓ “Proceedings of the Second International Symposium”. (2015). Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
- ✓ “Proceedings of the Third International Symposium”. (2016). Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
- ✓ “Proceedings of the Fourth International Symposium”. (2017). Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.

- ✓ "The Book of Abstracts of the Fifth International Symposium". (2018). Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
- ✓ E-Repository, Main Library, South Eastern University of Sri Lanka. (http://ir.lib.seu.ac.lk)

**Those who were interviewed:**

Jalaldeen, MSM. Coordinoator, 2nd International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.(16.08.2019)

Nairoos, MHM. Coordinator, 5th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. (16.07.2019)

Rasick, AM. Coordinator, 1st International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. (18.07.219)

Shathifa, MCS. Secretary, 3rd International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. (29.07.2019)

Shibly, FHA. Secretary, 4th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. (16.07.2019)